## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.127/2022.
Prosecution witness for P.W. 15.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. அசோகன்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 28.07.2026.

Accused absent. 317 Crpc petition filed.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது திருநெல்வேலி தனிப் பிரிவில் குற்றப் புலனாய்வு துறையில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு திருச்செந்தூர் வட்ட காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது 15.01.2020 அன்று 15 மணியளவில் அ.சா.1 நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்றேன். அந்த புகார் **அ.சா.ஆ 13**. அதன் அடிப்படையில் நிலைய குற்ற எண் 10/2020 இதச 294(பி), 302 பிரிவுகள் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ 14**. அதை புகாருடன் சேர்த்து திருச்செந்தூர் நீதித்துறை நடுவருக்கு காவலர் மூலமாக அனுப்பினேன். அதன் நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும், ஆய்வாளரின் பார்வைக்கும் வைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை

சம்பவ இடத்திலிருந்து காவல்நிலையத்திற்கு இருசக்கர வாகனத்தில் சுமார் 20 நிமிடத்தில் வரலாம். அ.சா.1 மூன்று மணிநேர காலதாமதமாக நிலையம் வந்ததற்கு குறிப்பிட்ட காரணம் சொல்லவில்லை என்றால் சரிதான். 15.01.2020 அன்று 15 மணியளவில் நான் வழக்கு பதிவு

செய்தேன். மூன்று மணி நேரம் காலதாமதமாக நீதித்துறை நடுவரால் முதல் தகவல் அறிக்கை பெறப்பட்டுள்ளது என்றால் சரிதான். காலதாமதத்திற்கான காரணம் எனக்கு தெரியாது. காவல்நிலையத்திலிருந்து நீதிமன்றத்திற்கு நடந்து சென்றால் 10 நிமிடத்தில் வரலாம் என்றால் சரிதான். நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் அ.சா.1 நிலையம் ஆஜராகவில்லை என்றும், புகாரும் கொடுக்கவில்லை என்றும், அ.சா.1 னிடம் கையொப்பம் மட்டும் பெற்றுக் கொண்டு பின்னிட்டு இந்த வழக்கிற்கு ஏதுவாக புகாரை தயாரித்துக் கொண்டிருக்கிறோம் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN Digitally signed by MUNISWAMI THANDAVAN

I Additional District & Sessions Judge,
Thoothukudi.